# பரீட்சகர் அறிக்கை

## ஆரம்பப் பரீட்சை – ஜனவரி 2014

## (59) முகாமைக் கணக்கியலும் வியாபார நிதியும்

---

## பிரிவு A

### முகாமைக் கணக்கியல்

**மேலோட்டம்**

இந்த வினாப்பத்திரம் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது:

1. பிரிவு A : முகாமைக் கணக்கியல் - 75 புள்ளிகள்
2. பிரிவு B : வியாபார நிதி – 25 புள்ளிகள்

**பொதுவான வியாக்கியானங்கள்:**

அனேக மாணவர்கள் பிரயோக / கணிப்பீட்டு பகுதிகளில் மிகச் சிறந்த திறமையை காட்டியுள்ளனர். எனினும், வினா இலக்கங்கள் 3, 4 மற்றும் 6 தொடர்பான கோட்பாட்டு அறிவினை (theoretical knowledge) கொண்டிருக்கவில்லை. முழு வினாப்பத்திரத்திலும் 13 புள்ளிகளுக்கு கோட்பாட்டு ரீதியான வினாக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்தப் பாடத்தில் சித்தியடைவதற்கு இந்த அறிவும் முக்கியமானதாகின்றது.

### வினா இல. 01 - 15 புள்ளிகள்

இந்த வினாவில் முகாமைக் கணக்கியலுக்கும் நிதிக் கணக்கியலுக்கும் இடையிலான வேறுபாடு, மேந்தலைக் கிரய ஒதுக்கீடு மற்றும் பகிர்வுப் பிரயோகம் மற்றும் நிதிக் கணக்கீட்டின்படியான இலாபத்தை கிரயக் கணக்கீட்டின்படியான இலாபத்துடன் கணக்கிக்கம் செய்தல் ஆகியன பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவு சோதிக்கப்பட்டது.

**வினாவின் பகுதி A யில்** 2 புள்ளிகளுக்கு முகாமைக் கணக்கியல் மற்றும் நிதிக் கணக்கியலுக்கும் இடையிலான வேறுபாடு சோதிக்கப்பட்டது. இந்தப் பகுதி பொதுவாக நன்கு விடையளிக்கப்பட்டு இருந்தது. பலர் பாவனையாளர், அறிக்கைக் காலம், தரவுகள் ஆகிய அடிப்படைகளில் இவற்றை வேறுபடுத்தியிருந்தபோதிலும், சிலர் முகாமைக் கணக்கியல் முகாமைக் கணக்குகளை தயாரிக்க உபயோகிக்கப்படும் மற்றும் நிதிக் கணக்கியல் நிதிநிலைமையினை விளங்கிக்கொள்ள உதவும் ஆகியன போன்ற ஒவ்வாத விடைகளை எழுதியிருந்தனர்.

**வினாவின் பகுதி B யில்** மேந்தலை ஒதுக்கம், முதன்மை மற்றும் இரண்டாந்தரப் பகிர்வு ஆகியன சோதிக்கப்பட்டது. தேய்மானக் கணிப்பீட்டைத் தவிர இந்தப் பகுதிக்கு நன்கு விடையளித்திருந்தனர்.

தேய்மானக் கணிப்பீடு டிசம்பர் மாதத்திற்கு மாத்திரம் காட்டப்படவேண்டி இருந்தது. ஆனால் பல மாணவர்கள் வினாவில் தரப்பட்டுள்ள மாதத்திற்கு தேய்மானம் கணித்திருந்தனர். மேலும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் கூட்டல் தொடர்பாக கணவனவீன தவறுகள் காணப்பட்டன.

**பகுதி C யில்** உள்ள வினாவை ஒத்த (நிதிக்கணக்கு மற்றும் கிரயக் கணக்கு இலாபங்களை கணக்கிணக்கம் செய்தல்) வினாக்களை செய்து பயிற்சி எடுத்தவர்கள் இந்தப் பகுதியில் நல்ல புள்ளிகளைப் பெற்றனர். எனினும் அனேகமானோர் நிதிக் கணக்கீட்டு மற்றும் கிரயக் கணக்கீட்டு இலாபங்களை கணிப்பதில் உள்ளடக்கவேண்டியவற்றை நன்கு அறிந்திருக்கவில்லை. இந்தப் பகுதிக்கு விடையளிப்பதற்கு கடந்தகால வினாப்பத்திரங்களில் இதனையொத்த வினாக்களை நன்கு பயிற்சி செய்து இந்த இரு முறைகளையும் நன்கு விளங்கிக்கொள்ளல் வேண்டும். உதா: பெயரளவு வாடகை (notional rent) கிரயக் கணக்கீட்டில் மாத்திரம் ஒரு செலவாகக் கொள்ளப்படும்.

**அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள்:**

1. பெயரளவு வாடகைகள் நிதிக் கணக்கில் செலவாகக் காட்டப்பட்டிருந்தது.
2. ஆராய்ச்சி செலவு கிரயக் கணக்கில் செலவாகக் காட்டப்பட்டிருந்தது.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**
ஒவ்வொரு கணக்கீட்டு மறைகளுக்கும் தொடர்புபட்ட செலவுகளை விளங்கிக் கொள்வதற்கு கடந்தகால வினாப்பத்திர வினாக்களை நன்கு பயிற்சி செய்தல் வேண்டும்.

## வினா இல. 02 - 20 புள்ளிகள்

இந்த வினாவின் **பகுதி A** யில் உறிஞ்சற் கிரய முறையில் வருமானக் கூற்றுத் தயாரித்தலும் **பகுதி B** யில் செயன்முறைக் கிரயக் கணக்கும் பரீட்சிக்கப்பட்டது.

**பகுதி A :** அனேக மாணவர்கள் இந்தப் பகுதிக்கு விடையளிக்கவில்லை. அவர்கள் விற்பனைப் பெறுமதி, நிலையான மற்றும் மாறும் நிருவாக, விற்பனைக் கிரயங்களை மாத்திரம் காட்டியிருந்தனர். சில மாணவர் உறிஞ்சல் விகிதத்தை சரியாகக் கணிப்பதற்கு நியம உற்பத்தியை உபயோகிப்பதற்குப் பதிலாக உண்மை உற்பத்தியை பாவித்திருந்தனர். இதன் காரணமாக ஆரம்பத் தொக்கு, இறுதித் தொக்கு மற்றும் நிலையான உற்பத்திக் கிரயங்களை தவறாகக் கணித்து புள்ளிகளை இழந்தனர். மேலும் அனேகமான மாணவர்கள் வருமானக் கூற்றில் மிகை / குறை உறிஞ்சற் கிரயத்தை காட்டத் தவறியிருந்தனர். மிகக் குறைவான மாணவர் மாத்திரம் இதனை சரியாகச் செய்திருந்தனர்.

**பகுதி B :** சில மாணவர்கள் ஒடிவுப் பெறுமதியை சரியாகக் கணக்கிற் கொண்டு செயன்முறைக் கணக்கு மற்றும் உற்பத்திக் கிரய மதிப்பாய்வை தயாரித்து நல்ல புள்ளிகளை பெற்றிருந்தனர். அனேக மாணவர்கள் சமான அலகுகளை தவறாகக் கணித்தமையினால், அலகுக் கிரயத்தை சரியாக கணித்திருக்கவில்லை.

**அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள்:**

- உறிஞ்சல் விகிதம் சரியாகக் கணிக்கப்படாமை.
- முந்திய செயன்முறையிலிருந்தான உள்ளீட்டை கணக்கிற் கொள்ளாமை.
- உற்பத்திக் கிரய மதிப்பாய்வில் ஒடிவுப் பெறுமதியை சரியாக கணித்திருக்காமை.
- WIP சரியாக கணிக்கப்படாமை.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கடந்தகால பரீட்சை வினாக்களை பயிற்சி செய்தல்.
- இந்தப் பாடத்திற்கான கற்கைப் பொதியை வாசித்தல்.

## வினா இல. 03 - 10 புள்ளிகள்

இவ்வினாவில் பூஜ்ய அடிப்படைப் பாதீட்டு அனுகூலங்கள், நிலையான மற்றும் நெகிழ்ச்சிப் பாதீடுகளுக்கு இடையிலான வேறுபாடு மற்றும் காசுப் பாதீட்டின் தயாரிப்பு ஆகியன பரீட்சிக்கப்பட்டன.

**மாணவர் பெறுபேறு:** ஒரு சில மாணவர் மாத்திரம் இந்த விளாவுக்கு முழுப் புள்ளிகளையும் பெற்றனர். பொதுவாக, இந்த வினாவின் பகுதி A மற்றும் பகுதி B யின் விடைகள் திருப்திகரமாக அமையவில்லை. பகுதி C க்கான விடை திருப்திகரமாக இருந்தது. பல மாணவர்கள் காசு உட்பாய்வுகளை சரியாக காட்டி இருந்தபோதிலும், தேய்மானம் போன்ற செலவுகளை மாதாந்தம் சரியாகக் காட்டாது ஒவ்வொரு காலாண்டு மதிப்பீடுகளையும் மாதத் தேய்மானங்களாக காட்டியிருந்தனர். 5% கழிவினை பலர் காசு உட்பாய்வாகக் காட்டியிருந்தனர்.

**சாத்தியமான காரணங்கள்:** மாணவர்கள் பூஜ்ய அடிப்படைப் பாதீடு, நிலையான மற்றும் நெகிழ்ச்சிப் பாதீடு பற்றிய நல்ல கோட்பாட்டு அறிவினை கொண்டிருக்கவில்லை. பொருள் வரையறை மற்றும் வேறுபாடு ஆகிய முக்கிய பதங்களை மாணவர்கள் தவறவிட்டிருந்தனர்.

சில மாணவருக்கு காசுப் பாதீட்டை தயாரிக்க தெரிந்திராததுடன், பதிலாக ஒவ்வொரு மாதத்திற்கும் T வடிவிலமைந்த காசேட்டை தயாரித்திருந்தனர். காசுப் பாதீட்டை ஏப்ரல் முதல் ஜூன் வரையான மூன்று மாதங்களுக்கு தயாரிக்குமாறு கேட்கப்பட்டு இருந்தபோதிலும், சில மாணவர்கள் மே மாதத்தை தவிர்த்து ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு மாத்திரம் தயாரித்திருந்தனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- காசுப் பாதீட்டை தயாரிப்பதில் அதன் வடிவமைப்பு முக்கியமானதாகும்.
- காசுப் பாதீட்டில் தேய்மானம் ஒரு காசுப் பாய்வாக கொள்ளப்படுவதில்லை.
- அறிவை வளர்ப்பதற்கு கடந்தகால பரீட்சை வினாக்களை பயிந்சி செய்யவும்.
- விடை எழுத ஆரம்பிக்க முன்னதாக வினாவை நன்கு விளங்கிக் கொள்ளவும்.
- தெளிவாக எழுதப் பழகவும்.

## வினா இல. 04 - 14 புள்ளிகள்

இந்த வினாவில் நியமக் கிரயமிடலின் அனுகூலம், முரண் பகுப்பாய்வு, நியம கிரயத் தாளை தயாரித்தல் ஆகியன பீட்சிக்கப்பட்டிருந்தது.

**மாணவர் பெறுபேறு:** அனேக மாணவர்கள் பகுதி A யில் கோட்பாட்டு அறிவு பகுதி C க்கான கணிப்பீடு ஆகியவற்றில் போதிய அறிவை கொண்டிருக்கவில்லை. பகுதி B விடைகளும் திருப்தியாக இல்லை.

பல மாணவர் பகுதி C யை நன்கு விளங்கிக் கொள்ளவில்லை. அதன் காரணமாக, அலகொன்றிற்கான நியம கிரயத் தாளுக்குப் பதிலாக மொத்தக் கிரயத்தை கணித்து 18,000 அலகுகளால் பிரித்து அலகுக் கிரயம் கணிக்கப்பட்டிருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- விலை மற்றும் உபயோக முரண் தொடர்பாக சூத்திரங்கள் பற்றிய ஐயுறவு.
- முரண்கள் அனுகூலமானவையா அல்லது பாதிப்பாளவையா என்பதனை குறிப்பிடாமை.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கடந்தகால பரீட்சை வினாக்களை பயிற்சி செய்தல்.
- முரண்கள் சாதகமா அல்லது பாதகமா என்பதனை குறிப்பிடுதல் வேண்டும்இ
- சூத்திரங்களை சரியாகப் பிரயோகித்தல்.
- விடை எழுத ஆரம்பிக்க முன்னதாக வினாவை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளல்.

## வினா இல. 05 - 16 புள்ளிகள்

இவ்வினாவில் சமப்பாட்டுப் புள்ளி, வரையறைக் காரணிகளுடன் கூடிய தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் உற்பத்தி செய்வதா அல்லது கொள்வனவு செய்வதா பற்றி தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியன பரீட்சிக்கப்பட்டன.

**மாணவர் பெறுபேறு:** பகுதி A யின் கீழ் பிரிவுகள் (a), (b) மற்றும் (c) மற்றும் பகுதி B ஆகியவற்றின் விடைகள் மிக திருப்திகரமாக இருந்தபோதிலும் சிலர் பங்களிப்பை கணித்தலில் நிலையான கிரயத்தையும் கழித்திருந்தனர். பகுதி C யில் பல மாணவர்கள் உற்பத்திக் கிரயத்தை கொள்வனவு விலையுடன் ஒப்பீடு செய்திருந்தனர். எனினும், தீர்மானம் மேற்கொள்ளலில் நிலையான கிரயத்தையும் கணக்கில் எடுத்ததன் காரணமாக புள்ளிகளை இழந்தனர்.

**பொதுவான தவறுகள்:**

- தீர்மானம் மேற்கொள்ளலில் நிலையான கிரயத்தையும் கணக்கில் எடுத்தல்.
- பெறுமதிகளை கிட்டிய ஆயிரங்களில் காட்டுவதில் எண்கணித தவறுகள்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கடந்தகால பரீட்சை வினாக்களை பயிற்சி செய்தல்.
- எப்போதும் உமது செயன்முறைகளை காட்ட வேண்டும்.
- தெளிவாக எழுதப் பழகவும்.

## பகுதி (B)

### வியாபார நிதி (25 புள்ளிகள்)

**வினா இல. 06** - 10 புள்ளிகள்

இந்த வினாவில் தற்காலிக காசுப் பற்றாக் யம், கடன் கிரயம் மற்றும் நிறையேற்றிய சராசரிக் கிரயம் பரீட்சார்த்திகளின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கிரயம் ஆகியவற்றைக் கணித்தல் 7 புள்ளிகளுக்கும் பரீட்சிக்கப்பட்டன.

**மாணவர் பெறுபேறு:** பகுதி B க்கான மாணவர்களின் விடைகள் முன்னைய ஆண்டினைக் காட்டிலும் திருப்திகரமாக இருந்தது. எனினும் பகுதி A யின் எளிமையான பொதுவான வினாவுக்கு (தற்காலிக பணப் பற்றாக்குறையை தீர்த்தல்) திருப்திகரமான விடைகள் தரப்படவில்லை.

பலா், நீண்ட கால நிதியளிப்புக்களான பங்குகளை வழங்குதல், தனிச்சங்களை வழங்குதல், நீண்ட கால வங்கிக் கடன் பெறுதல் ஆகியவற்றை எழுதியிருந்தனா். ஆனால் வினாவில் அழுத்தமாக ''தற்காலிக ஏற்பாடு'' என மிகக் குறுகிய கால நிதியளிப்பைப்பற்றி கேட்கப்பட்டிருந்தது. அனேக மாணவர்கள் இந்த 3 புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தது.

பகுதி B யில் உரிமையாண்மை மூலதனக் கிரயக் கணிப்பீட்டுக்கு நன்கு விடையளிக்கப்பட்டிருந்தது. கடன் கிரயக் கணிப்பீட்டில் அனேகமானோா் சமப்பெறுமதியில் வட்டிச் செலவை கணிக்கத் தவறியிருந்தனா்.

**பொதுவான தவறுகள்:**

- உரிமையாண்மைக் கிரயக் கணிப்பீட்டுச் சூத்திரத்தின் + அடையாளத்தை சரியான முறையில் குறிக்கத் தவறியிருந்தமை.
- சூத்திதைத்தை சரியாக எழுதியிருந்த போதிலும் அதில் பெறுமதிகளை பிரதியிட்டு எவ்வாறு தீர்ப்பது என்பதில் தவறுகள்.
- மீட்கக்கூடிய கடன் மீதான 18% வட்டியை தனிச்சத்தின் சமப் பெறுமதிமீது கணிக்கத் தவறியமை.
- WACC சூத்திரத்தை சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையில் கணிக்கத் தவறியமை.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கடந்தகால பரீட்சை வினாக்களை பயிற்சி செய்தல். இதனையொத்த வினாக்கள் ஒவ்வொரு கடந்தகால பரீட்சைகளிலும் பரீட்சிக்கப்பட்டிருந்தது.
- உரிமையாண்மை கிரயம், மீட்கக்கூடிய கடன் கிரயம் மற்றும் WACC க்கான கிரய சூத்திரங்களை சரியாக தெரிந்துவைத்திருத்தல்.
- IRR இனை கணித்தலில; +/- குறிகளை சரியாக உபயோகித்தல்.

**வினா இல. 07** - 15 புள்ளிகள்

இந்த வினாவின் பகுதி A யில் மீளப்பெறுகைக் கால குறைபாடுகள் பற்றியும் பகுதி B யில் (i) நிகரப் பெறுமதி மற்றும் IRR கணிப்பீடு மற்றும் (ii) செயற்திட்டத்தை தேர்வு செய்தல் ஆகியன பற்றியும் பரீட்சிக்கப்பட்டது.

**மாணவர் பெறுபேறு:** கிட்டத்தட்ட எல்லா மாணவர்களும் இந்த வினாவுக்கு சிறப்பாக விடையளித்து நல்ல புள்ளிகளைப் பெற்றனர். ஒரு சில மாணவர்கள் செயற்திட்ட மதிப்பாய்வில் தேய்மானத்தையும் கணக்கிற் கொண்டிருந்தனர்.

**பொதுவான தவறுகள்:**

- செயற்திட்ட மதிப்பாய்வில் ஆரம்ப முதலீடு மற்றும் ஒடிவுப் பெறுமதிக்கு தவறான அடையாளங்கள் (+ / -) உபயோகிக்கப்பட்டிருந்தன.
- சில மாணவர்கள் பெற்ற பெறுமதிகளுக்கான செயன்முறைகள் காட்டப்படவில்லை.
- தேய்மானம் காசுப்பாய்வாக கொள்ளப்பட்டிருந்தது.
- NPV யிலும் பார்க்க IRR மேன்மையானதென கொள்ளப்பட்டமை.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- செயற்திட்ட உட்காசுப்பாய்வு மற்றும் வெளிக் காசுப்பாய்வுகளை குறிப்பிடும்போது சரியான குறியீடுகளை (வெளிக் காசுப்பாய்வுகளை அடைப்புக் குறியிட்டும் உட்காசுப் பாய்வுகளை அடைப்பு குறி இல்லாமலும்) இடுதலல் கவனம் செலுத்ததல்.
- எப்போதும் உமது சென்முறைகளை காட்டவும்.
- கடந்தகால பரீட்சை வினாக்களை பயிற்சி செய்தல்.

- * * * -